# இரு கரங்களை நோக்கி ஆயிரம் கரங்கள்!

விழுப்புரம், திண்டிவனம் மாவட்டங்களில் இரண்டு நாட்கள்,
திருநெல்வேலி மாவட்டத்தில் இரண்டு நாட்கள்,
என நான்கு நாட்கள்
கழகத்தின் தலைவர்!
தமிழகத்தின் முதல்வர்!
தளபதி அவர்களோடு
சுற்றுப்பயணம் மேற்கொண்டேன்.
அவர் பெற்ற வரவேற்புகளைக் கண்டு
வியந்து போனேன்!

தலைவர் கலைஞரோடு எத்தனையோ முறை
தமிழகத்தைச் சுற்றி வந்திருக்கிறேன்!
வானளாவிய வரவேற்புகளை
கலைஞர் பெற்றதையும் பார்த்திருக்கிறேன்!
ஏன் மலைத்தும் இருக்கிறேன்!
ஆனால், தற்பொழுது தளபதி பெற்றுவரும்
வரவேற்பைப் பார்த்தபின்
இனி எவரும் இப்படி ஒரு வரவேற்பைப் பெற முடியாது
என்ற முடிவுக்கே வந்துவிட்டேன்!

ரோம் நாட்டு பெருவீரன் ஜூலியஸ் சீசர்
வெற்றி பெற்ற பின்னர்
ரோம் நகருக்குள் நுழையும் பொழுது
ரோமாபுரி மக்கள் சீசரை வரவேற்றார்கள்.
அந்த வரவேற்பு நிகழ்ச்சிதான் இன்றுவரை
உலகத்திலேயே பாராட்டத்தக்க வரவேற்பு நிகழ்ச்சி என்று
சரித்திர ஆசிரியர்கள் வர்ணிக்கிறார்கள்!
இந்த நிகழ்ச்சிகளை நான் பார்க்கவில்லை
ஆனால் படித்திருக்கிறேன்.
தளபதிக்கு நெல்லைத் திருநகரில் கிடைத்த வரவேற்பைப்
பார்த்த போது
எனக்கு அந்த நிகழ்ச்சிதான் ஞாபகத்திற்கு வந்தது!
தாமிரபரணி ஆற்றங்கரையிலிருந்து
பாளையில் உள்ள ஜவகர் மைதானம் வரையில்
நெடுஞ்சாலையில் வந்தபோதும்,
அங்கே இருக்கின்ற இரண்டொரு தெருக்களின் வழியே
வந்தபோதும்,
நெல்லைத் திருநகரின் நான்கு மாட வீதிகளைச்
சுற்றிவந்தபோதும்,
சென்னை திரும்ப முற்பட்டபோதும்,
அடடா எத்தனை வரவேற்புகள்!
வீரர் தீரர்எல்லாம் வீதிகளில்
வாழ்த்து முழக்கங்களோடு அலைஅலையாய் நிற்க!
வீடுகளில் எல்லாம் தாய்மார்கள் வாஞ்சையோடு சிரிப்பைச் சிந்தி
கைகளைக் குவித்து வணக்கம் தெரிவிக்க!
பள்ளி, கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள்
ஜல்லிக்கட்டு காளைகளாக மாறி
எப்படியும் தளபதியோடு கைகுலுக்கிட வேண்டும் என்று
முண்டியடித்துக் கொண்டிருந்தார்கள்!

காணும் இடங்களிலெல்லாம் கழகக் கொடிகள்!
வீதிகளிலெல்லாம் தோரணங்கள்!
வீட்டின் முற்றங்களில் மாலைகள்!
எங்கும் மக்கள் கூட்டம்!
எந்தச் சுற்றுப்பயண நிகழ்ச்சியிலும்
எந்தத் தலைவரும் செய்யாத ஒரு புதுமையை
தலைவர் தளபதி செய்ய துணிந்திருக்கிறார்!

கட்டுக்கடங்காத கூட்டம்
ஒருவர் வைத்த அடியை எடுத்து
வேறு இடத்தில் வைக்க முடியாத
அளவிற்கு அந்தக் கூட்டத்தில்



அப்படி ஒரு நெருக்கம்!
அதிலும் திண்டிவனத்தில்,
இரவு தன் ஆதிக்கத்தைத் தொடங்கிவிட்ட நேரம்

மின்விளக்குகளோ பெயருக்கு இருந்ததே தவிர
தங்களை அதிகம் வெளிச்சம் போட்டுக் காட்டிக்கொள்ளவில்லை!
அந்த நேரத்தில் மக்கள் கடலில் நீந்த ஆரம்பித்துவிட்டார் தளபதி!
போலீசாரால் கட்டுப்படுத்த முடியவில்லை!
மக்கள் கூட்டத்தையும் தளபதியையும் பார்த்து
என்ன நடக்குமோ என்று நான் பயந்துவிட்டேன்
“இப்படியா முதல்வரை மாபெரும் கூட்டத்தில் செல்ல
அனுமதிப்பீர்கள்”
என்று காவல்துறை அதிகாரிகளைக் கடிந்து கொண்டேன்.
அதற்கு நேர்மாறாக நெல்லைத் திருநகரில் வரவேற்பு!

**துரைமுருகன்**
கழகப் பொதுச் செயலாளர்



தாமிரபரணி ஆற்றுக்கு இருபக்கமும் கரைகட்டியது போல்
வீதிகளில் இருமருங்கிலும் ஆண்களும் பெண்களும்
குழந்தைகளும் நின்ற காட்சி மறக்க முடியாத காட்சியாகும்!

தளபதி தங்கள் அருகில் வருவதைக் கண்டதும்
மடை திறந்த வெள்ளம்போல் மக்கள் கூட்டம்!
போலீஸ் காவல் பற்றிக் கவலைப்படாமல்
தளபதியின் காரை நெருங்கியவுடன்
தாய்ப்பறவை கூண்டில் தன் குஞ்சுகளைப் பார்த்தவுடன்
தாவி அவைகளை தன் சிறகுக்குள் அணைத்துக் கொள்வது
போல்
தளபதி தாய்ப்பறவையாகி
காரைவிட்டு இறங்கி இரு கரங்களையும் நீட்டி,
பாசத்தைப் பொழிகின்ற சிரிப்பைச் சிந்தி,
அவர்களை அணைக்கச் சென்றபோது,

தலைவரின் இரு கரங்களை நோக்கி
ஆயிரம் கரங்கள் நீட்டி நின்ற காட்சி கண்கொள்ளாத
காட்சியாகும்!

நெல்லையில் நான்கு மாட வீதிகளையும் சுற்றி
பின்னர் நெடுஞ்சாலையில் பயணித்தபோதும்,
தாமிரபரணிக் கரையில் இருந்து ஜவஹர் மைதானம் வரை
நடந்தே சென்றபோதும்,
தாய்மார்கள் மடியிலிருந்த குழந்தைகளை எல்லாம் வாங்கி
தன் கரங்களில் தாங்கி முத்தமிட்ட காட்சியின் போதும்!
மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்து
“தளபதி வாழ்க ! தளபதி வாழ்க!”
என்று ஒலித்த குரல்களின் ஓசை
அந்த முக்கடல் ஓசையை வென்றிருக்கும் என்பேன்!
இதற்கிடையே
பல ஆயிரம் கோடி முதலீட்டுடன் துவங்கப்பட்ட
தொழிற்சாலைக்கு முதல்வர் தளபதி அடிக்கல் நாட்டினார்!

மறுநாள் ஊருக்குத் திரும்பும் முன்
விமான நிலையத்துக்குச் செல்லும் வழியில் ஒரு அரசு விழா!
“அரசு விழாவா அது?” என்ற ஆச்சர்யம் எனக்கு!
அவ்வளவு பெரிய கூட்டத்தை நான் சமீபத்தில் பார்த்தது இல்லை!
இனியும் பார்க்கமுடியுா என்ற சந்தேகம் எனக்கு!

தளபதி அவர்கள் முதலமைச்சர் என்ற ஸ்தானத்தில் நின்று
அற்புதமாக உரையாற்றினார்!
நெல்லைக்கு பல நல்ல திட்டங்களை அறிவித்தார்!
பிரியா விடைபெற்று நெல்லையை விட்டுப் பிரிந்து வந்தோம்!

இளைஞர் அணிச் செயலாளராக!
கழகத்தின் தலைவராக!
தமிழகத்தின் முதல்வராக!
இந்த மூன்று நிலையையும்
ஒரே நிலையாக்கி அன்றைக்கு
நம் தலைவர் தளபதி செய்துகாட்டிய அற்புதத்தைக் கண்டு
நான் திகைத்துப் போனேன்!

**கலைஞர் என்ற இமயத்தின் கொடுமுடிவரை பார்த்த**
**என்னையே வாய்பிளக்க வைத்து விட்டாயே என் தலைவா!**
**மற்றவர் கதி என்னவோ!**



புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. மற்றும் விராலிமலை மேற்கு, கிழக்கு, மத்திய ஒன்றியங்கள் சார்பில் நிதி ஒதுக்கீடு செய்வதில் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசுக்கு எதிரான கண்டன பொதுக்கூட்டம் செக் போஸ்ட் விராலிமலையில். புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையிலும், ஒன்றியச் செயலாளர்கள் அ.இளங்குமரன், மு.பி.ம.சத்தியசீலன், கே.பி.அய்யப்பன் ஆகியோர் வரவேற்புரையிலும் நடைபெற்றது. மாபெரும் பொதுக்கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கண்டன உரையாற்றினார். தலைமைக் கழகப் பேச்சாளர் மன்னை சோம.இளங்கோவன், துணை மேயர், அஞ்சுகம் பூபதி, டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. த.சந்திரசேகரன், கே.ஆர்.என்.போஸ், சு.சண்முகம் க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி, மு.பி. மணி, தென்னலூர் எம். பழனியப்பன், கே.எஸ்.சந்திரன், மு.க.இராமகிருஷ்ணன், வெ.முத்துகிருஷ்ணன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, ஆர்.ஆர். சாமிநாதன், ஓ.எஸ்.வெங்கடாஜலம், எம். செந்தில்குமார், வை.விஜயகுமார், எம்.எம்.பாலு, ஜெயலட்சுமி தமிழ்செல்வன், மு.கலைஞர் கருணாநிதி, தமிழினியன் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, பேரூர், வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.


